# தமிழ்நாடு அரசு

பேரூராட்சி அலுவலகம்,
விளாங்குடி

ந.க.எண். 189/2010 நாள் : 11.10.2010

**<u>2010-2011 ஆம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டம்</u>**
**<u>விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சி</u>**
**<u>மதுரை மாவட்டம்</u>**

*ஒப்பந்தப்புள்ளி அழைப்பு*

1. விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சியில் 2010–2011 ஆம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப் பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலை துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரிய துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

2. இப்பேரூராட்சியில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்குரிய ஒப்பந்தப் படிவங்களை 14.10.2010ம் தேதி முதல் 29.10.2010ம் தேதி வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் பிற்பகல் 3.00 மணிக்குள் உரிய தொகையினை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது Executive Oficer, Vilangudi Town panchayat என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை மூலம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை தபால் மூலமோ அல்லது விரைவு தபால் மூலமோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– மேலே சொல்லப்பட்ட வழிமுறைகளின்படி செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். தபால்வழி தாமதங்களுக்கு செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது. மேலும், இணையதளம் மூலம் பெற விரும்புவோர் http://tntenders.gov.in என்ற தளத்திற்குள் சென்று விபரம் தெரிந்து கொள்ளலாம்.

4. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாக அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக (Executive officer, Vilangudi Town Panchayat) என்ற முகவரிக்கு பெறப்பட்டு செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்கு செல்லத்தக்க வகையில் வங்கி வரைவோலை இருக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகளை அதற்குரிய பெட்டியில் 01.11.2010ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை தாக்கல் செய்யலாம். எதிர்பாராத காரணத்தினால் அன்றைய தினம் விடுமுறையாக அறிவிக்கப்படுமாயின் அதற்கு அடுத்த வேலை

நாளில் பிற்பகல் 3.00 மணி வரை தாக்கல் செய்யலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும்.

6. இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில், நேரில் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | காப்புத் தொகை 1% | ஒப்பந்த புள்ளி படிவ கட்டணம் + விற்பனைவரி | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டுஎண்.9,10 நேதாஜி தெரு மற்றும் யூனியன் பேங்க் காலனி 5வது தெருவில் வடிகாலுடன் கூடிய சிமிண்ட்சாலை, வார்டு எண்.14 இ.பி காலனியில் வடிகாலுடன் கூடிய சிமிண்ட்சாலை, மற்றும் வார்டு எண்.12 பாலமுருகன் கோவில் 1, 2 மற்றும் 3வது குறுக்கு தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 40.47 | 40470 | ஒப்பந்தப் புள்ளி ரூ. 9000 /–<br>விற்பனை வரி ரூ. 180 /–<br>சர்ஜார்ஜ் ரூ. 14 /–<br>வாட்வரி ரூ. 360 /–<br>ரூ. 9554 /– | 180 நாட்கள் |
| 2 | வார்டுஎண்.3 அசோக் நகர் 4வது தெருவில் வடிகாலுடன் கூடிய சிமிண்ட்சாலை, மற்றும் வார்டு எண்.5 அஞ்சல் நகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருவில் சிமிண்ட்சாலை அமைத்தல். | 38.26 | 38260 | ஒப்பந்தப் புள்ளி ரூ. 9000 /–<br>விற்பனை வரி ரூ. 180 /–<br>சர்ஜார்ஜ் ரூ. 14 /–<br>வாட்வரி ரூ. 360 /–<br>ரூ. 9554 /– | 180 நாட்கள் |

## <u>நிபந்தனைகள்</u>

1. மேற்கண்ட பணிகளுக்கு நேரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையினை செயல் அலுவலர், விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலையாக ( DD ) பெற்று இணைக்கப்பட வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி அட்டவணை ஒவ்வொரு பேக்கேஜிற்கும் தனித்தனியாக கொடுக்கப்பட வேண்டும். வேலைக்கான அட்டவணை விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் இணைப்பு படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி செலுத்தி 29.10.2010 மாலை 3.00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43 / 1998 மற்றும் விதிகள் 2000ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.

4. ஒப்பந்ததாரர்கள் ஒரு வேலைக்கு தனித்தனியே இரண்டு மூடி முத்திரையிடப்பட்ட உரைகள் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு உறையில் பிணையத் தொகை செலுத்தியதற்கான இரசீது மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை மேற்கொள்ளுவதற்கான தகுதியினை தெரிவிக்கும் விபரங்கள் அடங்கிய படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். மற்றொரு உறையில் ஒப்பந்தப்புள்ளிகள் அடங்கிய படிவத்தில் (Scheduled Rate) விலைப்புள்ளிகள் குறித்து அனுப்பப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பதற்கு முன் தகுதியை தெரிவிக்கும் தகவல் குறித்த உறைகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றக்கூடிய தகுதி உடையவர் என கண்டறியப்பட்டால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகளுக்கான உறை பிரிக்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பணி ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

7. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் சாலைப் பணிகளில் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. வேலைகள் நடைபெறும் போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் பொருட்களின் தரம் தொடர்பாக சான்று பெற்றுத்தர ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார். சான்றில்லா பட்சத்தில் பட்டியல் தொகை வழங்கப்பட மாட்டாது.

9. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கத் தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

10. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமானவரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும்போது விற்பனைவரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்றினை இணைத்தல் வேண்டும்.

12. ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும். அஞ்சல்வழி மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான காலதாமதத்திற்கு இப்பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.

13. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்குப்பிறகே வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.

14. அடித்தல் திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.

15. வேலைகள் முடிவு பெற்றவுடன் பணி மேற்பார்வையாளர் மற்றும் பேரூராட்சி பொறியாளர் அவர்கள் மூலம் அளவுகள் எடுக்கப்பட்டு அளவு புத்தகத்தில் பதிவு செய்து உதவி செயற்பொறியாளரால் மேல் அளவுகள் செய்து மேலொப்பம் வழங்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடித்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

17. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும்போது பிணை வைப்புத்தொகை 1% சதவிகித காப்புத் தொகை செலுத்துச்சீட்டினை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இத்தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

18. நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகிய துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சொத்து மதிப்பிற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு தரம் பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| வகுப்பு 1 | – | ரூ. 25.00 இலட்சத்திற்கு மேல் |
| வகுப்பு 2 | – | ரூ. 25.00 இலட்சம் வரை |

அரசாணை எண் 1729. பொ.ப.து / நாள் 29.12.1992

மேற்படி பணிக்கான ஒப்பந்தப்படிவத்தினை http://tntenders.gov.in, http://tntownpanchayat.org, http://www.tn.gov.in/dtp/ என்கிற இணைய தளங்களிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி தாக்கல் செய்யலாம்.

19. ஒப்பந்ததாரருக்கான தகுதிகள் குறித்து விபரத்தினை அலுவலக விளம்பர பலகையில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
விளாங்குடி பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

**பெறுநர்**

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்,
விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சி.

**நகல்**

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை–20 அவர்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சி உதவி செயற்பொறியாளர், மதுரை அவர்களின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
3. பேரூராட்சி உதவி பொறியாளர், விளாங்குடி தேர்வுநிலை பேரூராட்சி.
4. மதுரை மாவட்ட அனைத்து பேரூராட்சிகள் – விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்ய.